REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

## இந்தியாவில் அடுத்த ஆண்டில் அணுசக்தி உலை

புதுடில்லி, மார்ச் 21—

இந்தியாவில் முதலாவது பரீட்சார்த்த அணுசக்தி உலை ஒன்று இவ்வாண்டிலோ அல்லது அடுத்த ஆண்டுத் துவக்கத்திலோ நிறுவப்படுமென்றும், அதன் பின்னர் அடுத்த ஆண்டு இறுதிக்குள் பெரிய அணு உலை ஒன்று அமைக்கப்படுமென்றும் பிரதமர் நேரு பண்டிதர் தெரிவித்திருக்கிறார்.

மலர் 2] சென்னை: பங்குனி 9உ செவ்வாய் (22—3—55) ★ ★ வெளியீடு: பங்குனி 10உ புதன் (23—3—55) [இதழ் 239

# வளந்தரும் பெருந்தொழில்களெல்லாம் அங்கே

## திட்டத்தில் நமக்குரிய பங்கு எங்கே?

## ஐந்தாண்டுத் திட்ட கண்டன நாள் இரத்தக்கறை படிந்த வரலாருகுமா?

### மதுரையில் தோழர் சம்பத் எச்சரிக்கை

"ஐந்தாண்டு திட்டம் என்றால் என்ன? ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு, நாட்டு வருமானத்தைப் பெருக்க, மக்கள் ஒத்துழைப்புடன்—நிபுணர்களின் சேவையுடன் 5 ஆண்டுகள் என்று காலத்தை வரையறுத்துக்கொண்டு, சர்க்கார் பல திட்டங்களை நிறைவேற்றுவார்கள்; இப்படி ரஷ்ய நாட்டில் முதல், இரண்டாவது, மூன்ருவது, நான்காவது என நான்கு ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றியபின் 5-வது ஐந்தாண்டுத் திட்டத்தை துவக்க இருக்கின்ருர்கள்; நவசீனவில் இதே முறையைப் பின்பற்றுகிருர்கள்.

"இந்திய சர்க்காரும் அதே முறையில் திட்டமிட்டார்கள்; இந்தியாவின் அபிவிருத்திக்கு, நாட்டு வருமானத்தைப் பெருக்குவதற்கு ஒரு ஐந்தாண்டுத் திட்டம்; அதற்கு 2,069 கோடி ரூபாய் செலவழிப்பது என்ருர்கள்; ஆரம்பத்தில் நாமும் மகிழ்ச்சியுற்ருேம்; ஆனல், இந்திய சர்க்கார், ஐந்தாண்டுத் திட்டத்தை அமுல் நடத்த ஆரம்பித்துச் செய்ய இருக்கின்ற திட்டங்களையும் வேலைகளையும் வெளியிட்டார்கள்; அப்பொழுதுதான் நமது மகிழ்ச்சி அதிர்ச்சியாக மாறியது!

"ரூபாய்க்கு 14 அணு திட்டம் வடநாட்டில்! 2 அணு திட்டம் தென்னுட்டில்! 'ஏன் இந்த நிலை,' என ஆராய்ந்தால், வெள்ளைக்காரன் வெளியேறுவதற்கு முன்னர் டாட்டா, பிர்லா போன்றவர்கள் கூடி வகுத்த 'பம்பாய் திட்டமும்,' அகில இந்தியக் காங்கிரஸ் வகுத்திருந்த பொருளாதாரத் திட்டமும் அப்படியே சிறு மாற்றங்களுடன், இப்பொழுது, இந்திய சர்க்காரின் ஐந்தாண்டுத் திட்டம் என்று கூறி, அதற்கு 2,069 கோடி ரூபாயை வரியாகவும், கடனுகவும், மற்ற நாட்டு உதவியுடனும் பெற்று செய்கின்ருர்கள்; இந்தியாவில் உள்ள மொத்தம் 36 கோடி மக்களில் மூன்றில் ஒரு பகுதிக்கு அதிகமாக உள்ள 12 கோடி மக்களுக்கு பட்டை நாமம் போடுகின்ற திட்டத்தை வகுத்துள்ளார்கள்; 2,069 கோடி ரூபாய் 2120 ஆக, 2,300 ஆக, 2,600 கோடியாக வளரும் என்று யூகம் சொல்லுகின்ருர்கள்; இதில் பெரும் பகுதியை வடநாட்டில் செலவழிக்கின்ருர்கள்; 12 கோடி மக்கள் வாழும் தென்னுட்டுக்கு செலவழிப்பது 100 கோடி ரூபாய்கூட இல்லை.

"புதிய புதிய திட்டங்கள்—ரூ. 200 கோடி, ரூ. 150 கோடி, ரூ. 100 கோடி என்ற அளவில்—வடநாட்டில்! தமிழகத்திற்கு—தென்னுட்டுக்கு திட்டமுண்டா என்ருல்—'உண்டு; ரூ. 7 கோடி, ரூ. 5 கோடி, ரூ. 3 கோடி, ரூ. ¾ கோடி,' என்கிருர்கள்! இதன் மூலம் தென்னுடு வஞ்சிக்கப்படுகின்றது! இதை நாம் கடந்த மூன்ருண்டுகளாக எடுத்துச் சொல்லி வருகின்ருேம்.

"முதல் ஐந்தாண்டுத் திட்டம் இப்படி உள்ளது; இப்பொழுது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் ரூ. 5,000 கோடியிலிருந்து ரூ. 6,000 கோடி வரை செலவழிக்கத் திட்டமிட்டு வகுக்க உள்ளார்கள்; இதில் சென்னை மாநிலத்திற்கு என்ன செய்யப் போகின்ருர்கள்?

"நிதி அமைச்சர் சுப்பிரமணியம், வரவு-செலவுத் திட்டக் கூட்டத்தில் சட்டசபையில் கூறுகின்ருர்—'இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், சென்னைக்கு, கிராமங்களில் பாதைகள் போடுவது—மருத்துவ விடுதி அமைப்பது—ஆரம்பப்பள்ளிகளை அதிகப்படுத்துவது—குடிசைத் தொழில்களுக்கு ஊக்கமளிப்பது—என்று கூறுகின்ருர்.

"அங்கே—வடநாட்டில் இரும்பு ஆலைகள்—தொழிற்சாலைகள்—மின்சார உற்பத்தி நிலையங்கள்—என்று சொல்கின்ருர்கள்; ஏன் இந்த நிலை? வடநாட்டு எஜமானர்கள் தந்திருக்கின்ற வரப்பிரசாதம் இவ்வளவுதான்; இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னுடு புறக்கணிக்கப்பட்டிருப்பதை, இவ்வாண்டில், கண்டன ஊர்வலம், பொதுக் கூட்டம் மூலம் தெரியப்படுத்துகின்ருேம்.

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னுடு புறக்கணிக்கப்படுமானல், அறிந்து நாம் கொண்டாடுகின்ற

**ஐந்தாண்டு திட்ட கண்டன நாள், ஊர்வலத்துடன்—பொதுக் கூட்டத்துடன் நிற்காது; இரத்தக்கறை படிந்த நாளாக வரலாற்றில் இடம் பெற்ருல் ஆச்சரியப்படுவதற்கில்லை!**

"தென்னுடு விவசாய நாடாக இருப்பது மட்டும் போதாது; விவசாயம் பெருகினல் மட்டும் ஒரு நாட்டுக்கு முன்னேற்றம் கிடைத்துவிடாது; ஒரு நாடு தொழில் மயமானல்தான் உண்மையான முன்னேற்றமாகும்; தென்னுடு தொழில் மயமாக மூலதனம் வேண்டும்—இயந்திரம் வேண்டும்—மின்சாரம் தேவை; இவைகள் அனைத்தையும் நாம் பெறமுடியும்; ஆனல், அதிகாரம் டில்லியின்—மத்திய சர்க்காரின் கையில் இருப்பதால் புறக்கணிக்கப்படுகின்ருேம்.

"வடநாட்டில் தொழிற்சாலைகள் அமைக்கின்ருர்கள்—தென்னுட்டில் இல்லை; இப்பொழுது வடநாட்டில் 3 இரும்பு தொழிற்சாலைகள் உள்ளன; 'இன்னும் வேண்டும்—அமைக்கப் போகின்ருேம்,' என்று கூறுகின்ருர்கள்; ரூ. 2,069 கோடி செலவில் ஐந்தாண்டுத் திட்டம் தயாரித்தவர்கள், தென்னுட்டு மக்களுக்கு சரிபங்கு கொடுப்பதென்ருல் ரூ. 900 கோடி தென்னுட்டுக்கு செலவழிக்க வேண்டும்; ஏன்? நாம் 13 கோடி மக்களாக இருக்கின்ருேம்.

"ரூ. 200 கோடியில் வங்கத்திற்கு தாமோதர் நதி பள்ளத்தாக்கு திட்டமென்ருல், ஏன் ரூ. 60 கோடி செலவழித்து சேலத்தில் இரும்பு ஆலை நிர்மாணிக்கக் கூடாது?—ரூ. 156 கோடி செலவில் பக்ரா-நங்கல் திட்டமென்ருல், ஏன் மற்ருெரு ரூ. 60 கோடி செலவழித்து தென் ஆற்காட்டில் நிலக்கரி சுரங்கம் வேலை செய்யக்கூடாது? அப்பொழுதுதானே தமிழ் நாட்டின் நிலை வளரும்?"

—இவ்வாறு, தோழர் ஈ. வெ. கி சம்பத் அவர்கள், மதுரை நகரில், 20—3—55 அன்று மாலை 7 மணியளவில், திலகர் சதுக்கத்தில் நடைபெற்ற ஐம்பதினுயிரத்திற்கதிகமான மக்களடங்கிய ஐந்தாண்டுத் திட்டக் கண்டன நாள் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

(4-ம் பக்கம் பார்க்க.)

## மெயில் - கூட்ஸ் - வண்டிகள் மோதல்

ஒருவர் பலி: 34 பேருக்கு காயம்

பம்பாய், மார்ச் 21—

மேற்கு பகுதி இந்தியன் இரயில்வேயில் பம்பாயிலிருந்து நேற்று இரவு புறப்பட்ட பிராண்டியர் மெயில் வண்டியொன்று, பேயன்—கங்காபூர் ஆகிய இடங்களுக்கிடையில் உள்ள பத்தேசிங்பூரில் மற்ருெரு 'கூட்ஸ் வண்டி'யுடன் மோதிக்சொண்டதின் விளைவாக ஒருவர் கொல்லப்பட்டார் என்றும், 34 பேர் காயமுற்றனர் என்றும் செய்தி ஒன்று அறிவிக்கிறது.

அந்த மெயில் வண்டியில் பொருத்தப்பட்டிருந்த 3, 4-வது வண்டிகள் இரண்டும் தடம் புரண்டன என்றும் கூறப்படுகிறது.

## பொதுமக்கள்மீது பாரத்தை போட்டு சர்க்கார் கடமை மறக்கலாமா?

### கைத்தறி பாதுகாப்பு குறித்து காமராசர் தரும் யோசனை

"விவசாயத் தொழிலுக்கு அடுத்தபடியாக உள்ள மிகப் பெரிய தொழில் கைத்தறித் தொழிலேயாகும்; மாநிலத்தில் பல லட்சக் கணக்கான மக்கள் தங்கள் வாழ்க்கையை நடத்த இத்தொழிலையே சார்ந்திருக்கிருர்கள்; ஆகவே, சர்க்காரிடமும், பொதுமக்களிடமும் பாதுகாப்பை நாட அத்தொழிலுக்கு உரிமையுண்டு; சர்க்கார் அதற்குத் தரும் பாதுகாப்பையும்விட மக்கள் அதற்குத் தரும் ஆதரவுதான் மிக முக்கியமானதாகும்."

—இவ்வாறு, நேற்று சென்னையில் நடைபெற்ற இரண்டாவது அகில இந்திய கைத்தறி வார விழாவின் இரண்டாவது நாள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்துப் பேசிய முதலமைச்சர் காமராசர் குறிப்பிட்டிருக்கிருர்.

தொடர்ந்து அவர் பேசுகையில் குறிப்பிட்டார்:—

"விற்பனையாகாமல் இப்போது அதிகமாகக் கையிருப்பில் கைத்தறித் துணிகள் குவிந்துள்ளன. இதனை விற்பதற்கான ஏற்பாடுகள் செய்தாலொழிய மேற்கொண்டு உற்பத்தி பற்றி நினைப்பது கூடாது. அதிகம் உற்பத்தி செய்யாவிட்டால் தங்கள் வாழ்க்கைக்கு இத்தொழிலை நம்பியிருக்கும் லட்சக்கணக்கான கைத்தறி நெசவாளர்களுக்கு வேலை அளிக்க முடியாது. தற்போது, மாநில கைத்தறி நெசவாளர்களிடம் ரூ. 50 லட்சம் பெறுமான கைத்தறிச் சரக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. மாநிலம் முழுமையிலுமாக ரூ. 1 அல்லது 1½ கோடி பெறுமான மூள்ள சரக்குகள் குவிந்து கிடக்கக்கூடும். இவை முதன் முதலில் விற்பனை செய்யப்பட்டாக வேண்டும்.

"இவ்வாறு குவிந்துள்ள கைத்தறிச் சரக்குகளின் கையிருப்புகளை கூடிய விரைவில் விற்பனை செய்வதற்கு வசதியாகக் கதர் உண்டியல்களைப் போன்று கைத்தறி உண்டியல்களுக்கு ஏற்பாடு செய்யலாமா என்பதைப் பரிசீலிக்க வேண்டும்."

இவ்வாறு யோசனை தெரிவித்த முதலமைச்சர் காமராசர் மேலும் குறிப்பிட்டதாவது:-

"இந்தப் பிரச்சினைக்குச் சரியான ஒரு பரிகாரம் காண்பதில் இப்போது மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் மிகவும் அக்கறை கொண்டுள்ளனர்; 'சர்க்கார் இது விஷயம் பற்றி 'அதிகமாக ஒன்றும் செய்து விடவில்லையே' என்ற அதிருப்தி ஒரு சிலருக்கு இருக்கலாம்; கைத்தறித் துணிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு போதாதென்பதை எடுத்துக் காட்டவும், அதற்கு மேலும் பாதுகாப்பு அளிக்குமாறு சர்க்காரைக் கேட்கவும் அவர்களுக்கு உரிமை உண்டு; இந்தப் பிரச்சினையை எவ்விதம் வெற்றிகரமாகச் சமாளிக்கலாம்என்பதுபற்றியதங்களது யோசனைகளை அதிகாரிகளிடம் தெரிவிக்க வேண்டும்."

## சென்னையில் ஐந்தாண்டுத் திட்ட கண்டன நாள்!

சென்னை (கோடம்பாக்கம்), மார்ச் 21—

"எந்தத் துறையாயினுஞ் சரி, இந்தியப் பேரரசு தென்னுட்டைப் புறக்கணித்தேதான் வருகிறது; ஐந்தாண்டுத் திட்டம் இந்த உண்மையை உணர்த்துவதாக இருக்கிறது; 'ஐந்தாண்டுத் திட்டத்தினல் வடநாடு வாழ்வு பெறவும், தென்னுடு தேயவுமான நிலை இருக்கிறது,' என்பதை நாம் எடுத்துக்காட்டி, இந்த வஞ்சகத்தை எப்படிக் கண்டிக்காமலிருக்க முடியும் என்று கேட்கிருேம்?"

—என்று தோழர் கண்ணதாசன் அவர்கள், சென்னை 35-வது வட்டக் கிளை தி மு. கழகச் சார்பில், கோடம்பாக்கத்தில், 20-3-55ல் நடைபெற்ற ஐந்தாண்டுத் திட்ட கண்டன நாள் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கு தோழர் க இளங்கீரன் தலைமை தாங்கினர். தோழர்கள்: க. துரை, இரகுநாதன் ஆகியோர் பேசியபின், "இந்தியப் பேரரசு, 'நாட்டின் நலன் பெருக திட்டங்களை தீட்டுகிருேம்' என்று கூறிக்கொண்டு, ஐந்தாண்டு திட்டங்களைப் போட்டு வடநாட்டையே வாழ வைப்பதற்கான வழிவகை

(4-ம் பக்கம் பார்க்க)

பம்பாய், மார்ச் 20—

இந்தியா—சீன பண்டமாற்று ஒப்பந்தத்தின் கீழ், சீனவிலிருந்து 2 லட்சம் ராத்தல் சீனக் கச்சாப் பட்டு இறக்குமதி, இந்திய மத்திய பட்டுக் குழுவிற்கு வந்துள்ளதாம்.

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 22—3—'55 செவ்வாய்


# அமைச்சரின் அறிவிப்பு

கைத்தறி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் தேங்கிக் கிடப்பது மட்டுமல்லாமல், கைத்தறியாளர் கூட்டுறவு உற்பத்திச் சங்கங்களிலிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்து கொண்ட தனி வியாபாரிகளிடமும் சில கோடி ரூபாய் மதிப்புடைய கைத்தறித் துணிகள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கின்றன என நேற்று குறிப்பிட்டிருந்தோம். அதுவுமன்றி கூட்டுறவு உற்பத்திச் சங்கங்களில் ஒன்றுபடாது ஒதுங்கியிருந்து உற்பத்தி செய்யும் நெசவாளர்களிடமிருந்து கொள்முதல் செய்து விற்று வரும் வியாபாரிகளிடத்திலும், செலவழிந்தது போக மேலும் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புடைய கைத்தறி ஆடைகள் முடங்கிக் கிடக்கக்கூடும் என நிச்சயமாக நம்புவதற்கு இடமுண்டு எனவும் நேற்று விளக்கியிருந்தோம். ஆக சில கோடி ரூபாய் மதிப்புடைய கைநெசவுத் துணிகள் வியாபார நிலையங்களில் மக்கிக் கிடக்கின்றன என்பது நிச்சயமாகிறது.

தம்மிடத்தில் மட்டும் ரூ. 50 லட்சத்திற்குமதிப்புடைய கைத்தறி ஆடைகள் விற்பனையாகாமல் முடங்கிக்கிடப்பதின் காரணமாக, கூட்டுறவு உற்பத்திச் சங்கங்களிலிருந்து மேலும் கொள்முதல் செய்யப் போவதில்லை என மாநில கூட்டுறவு விற்பனை சங்கம் முடிவிற்கு வந்துவிட்டிருக்கிறது. மேற்படி சங்கத்தின் இப்போக்கை அப்படியே பின்பற்றி, கூட்டுறவு உற்பத்திச் சங்கங்களிலிருந்து உற்பத்தியாகும் நான்கில் மூன்று பகுதியை நேரடியாக வாங்கிவிற்று வந்த வியாபாரிகளும், வழக்கம் போல் கொள்முதல் செய்ய முடியாது எனக் கூறிவிடுவர் என்பது எதிர்பார்க்கக்கூடியதேயாகும். மேற்குறிப்பிட்டுள்ள தங்கள் முடிவை ஏற்கனவே வியாபாரிகள் விற்கத் தவறி இருந்தாலும், மாநில கூட்டுறவு விற்பனை சங்கத்தின் வெளிப்படையான முடிவு தெரிந்தபின்னரும், அவர்கள் அம்முடிவை செயலாற்றாமல் இருக்க எந்தவித நியாயமும் கிடையாது; கண்டிப்பாகச் செயலாற்றியே தீருவர்.

கூட்டுறவு விற்பனை சங்கத்தினுடையவும், வியாபாரிகளினுடையவும் மேற்குறித்த முடிவின் உடனடி விளைவை ஆராய்ந்து பார்த்தால், நமக்கு பயங்கரமான அச்சமேற்படுகிறது. இலட்சக்கணக்கான கைத்தறியாளர் குடும்பங்களை, மீண்டும் தீவிரமாகத் தாக்கக் காத்துக்கொண்டிருக்கும் பஞ்சமும் பட்டினியும் மனக்கண் முன் தோன்றி நமது இதயத்தைச் சல்லடைக் கண்களாகத் துளைக்கின்றன.

அத்தகுக் கொடுமையை விளைவாகக் கொடுப்பதுடன் மட்டுமே அம்முடிவு நின்றுவிடும் எனவும் சொல்லிவிடுவதற்கில்லை. உற்பத்தி-விற்பனை ஆகிய இரண்டிலும் நெசவாளர்களிடையே ஏற்பட்டுவரும் புதிய மனமாற்றத்தையே ஒழித்துவிடக் கூடுமோ எனவும் அஞ்சவேண்டியதாக இருக்கிறது.

அதாவது, கூட்டுறவு முறை பொருளியலில் ஒரு புதிய திருப்புமுகமாகும். மற்ற பொருளியல் ஏற்பாட்டில் இல்லாத சிறப்பு, இக்கூட்டுறவு முறையில் உண்டு. தனி நபரின் விருப்பத்திலிருந்து தானே இயங்கி வளம் தேடித் தருவது கூட்டுறவுமுறை. மேலே இருந்து பிறக்கும் கட்டளைக்கு அடங்கி, விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அச்சம் கொண்டு, இயந்திரம் போல் இயங்கி வளம் சேர்க்கும் போக்கு, கூட்டுறவு முறையில் அறவே கிடையாது. அதுவுமன்றி, தனி நபருக்குள்ள 'தனித்தன்மை-சிறப்பு—நன்மதிப்பு' ஆகிய அனைத்தையும் நம்பி வளர்த்து வருவது, பொருளியலில் கூட்டுறவு முறையேயாகும்.

கூட்டுறவு முறையின் உள்ளடக்கமாக இருந்துவரும் இவ்வுயர் சிறப்பை பொதுவாகப் பெரும்பான்மை மக்களும் குறிப்பாக கைத்தறிவாளர்களும், போதிய அளவில் உணர்ந்து கொண்டிருக்கவில்லை. இப்பொழுதுதான் சிறுகச் சிறுக நெசவாளர் அறியத் துவங்கி இருக்கின்றனர். இப்பொழுது கைத்தறி ஆடைகளுக்கு ஏற்பட்டுள்ள தேக்கம், கூட்டுறவு முறையில், கைத்தறியாளர்களிடம் தோன்றியுள்ள நம்பிக்கையை நாசஞ் செய்வதாக முடிந்து விடுமோ என பயப்பட வேண்டியதாக இருக்கிறது.

கைத்தறி மூலம் உற்பத்தி செய்யப்பட்டுவரும் பல நிற சேலை வகைகளையும், ஆடவர் அணியும் வெள்ளைநிற ஆடைகளையும், நெசவாலைகள் உற்பத்தி செய்யக்கூடாது எனக் கட்டுப்பாடு விதித்தாக வேண்டும். அக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டால் அல்லாது கைத்தறிகளுக்கும், அவைகளை நம்பி உயிர் வாழ்ந்துவரும் கோடானுகோடி மக்களுக்கும் வாழ்வு கிடையாது என்பது உறுதியாகும். சென்ற கால அனுபவம் இந்த உண்மையைத் தான் வலியுறுத்துகிறது.

இத்துறையில் சென்னை சட்டசபையில் திட்டவட்டமான தீர்மானம் ஒன்று ஏற்கனவே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அத்தீர்மானத்தை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமே என்ற கவலையும், கருத்தும் இந்தியப் பேரரசிற்கு இதுவரை ஏற்படவில்லை. ஏற்படாததுடன், சென்னை சட்டசபையின் முடிவை செயலாற்ற, இந்தியப் பேரரசு விரும்பவில்லை — விரும்பாது எனவும், அதன் சார்பில், தமிழ் நாட்டில் பிறந்து 'தத்து'ப் போயிருக்கிற அமைச்சர் ஒருவர், அச்சமின்றி ஏற்கனவே அறிவித்தும் விட்டார். நிற்க,

கைத்தறி வாரத்தைத் துவக்கி வைத்த சென்னை அரசாங்க நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம் அவர்கள், தமக்குள்ள இயல்பை மாற்றிக்கொண்டு பின்வருமாறு கூறியுள்ளார் :—

**"துணி ஆலைகளின் போட்டியிலிருந்தும் கைத்தறித்** தொழிலைப் பாதுகாக்க வேண்டுமென்பதே சில ரகங்களைக் கைநெசவுக்கு ஒதுக்கி விட வேண்டுமென்று கூறுவதின் நோக்கமாகும்; இது தான் இந்தப் பிரச்சினை தீருவதற்கான நேரான—நியாயமான—சுலபமான பரிகாரமும் ஆகும்."

இவ்வாறு தனிப்பட்ட ரகங்களை கைத்தறிக்கே ஒதுக்கி விட வேண்டுமென்ற இக் கொள்கையை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ளாவிட்டால் பிரச்சினையை வேறு எவ்விதத்திலும் தீர்த்துக் கொள்ளமுடியாது."

கைத்தறியாளர் நல்வாழ்வு பெறும் வழியை, மந்திரி திட்டவட்டமாகக் கூறிவிட்டிருக்கிறார். அதை நிறைவேற்றும் பொறுப்பு இனி இந்தியப் பேரரசின் கையில்தான் இருக்கிறது என்ற எண்ணத்தில், அமைச்சர், வழியை அறிவிப்பதோடு நின்றிருக்கிறார்.

ஆனால், கைத்தறியாளர்களுக்கான நல்வழியைச் சுட்டிக் காட்டுவதோடுமட்டுமே தனது கடமை முடிந்து விட்டது என்ற நினைப்பில் அமைச்சர் அறிவித்துள்ளதை, நம்மால் அப்படியே ஒப்புக்கொள்ள முடியாது. துவக்க விழாவில் தான் கூறிய அறிவிப்பை, இந்தியப் பேரரசிற்குக் கொடுத்த ஒரு இறுதி எச்சரிக்கையாகக் கொண்டு, உடனடியாக ஆலைகளுக்குக் கட்டுப்பாடு விதிக்கும்படி இந்தியப் பேரரசை நெருக்கிப் பிடிக்க வேண்டும். இந்தியப் பேரரசு இணங்கிவராவிட்டால் தானும் மற்ற அமைச்சர்களும் பொறுப்பை விட்டு விலகி, ஒரு முதல்தரமான அரசியல் நெருக்கடியை உருவாக்க வேண்டும். அத்தகு நிலையிலும் சென்னை அரசாங்கத்தின் கோரிக்கையை நிறைவேற்ற இந்தியப் பேரரசு உடன்படாவிட்டாலும், கைத்தறியாளர்கள் நிலையான வாழ்வு பெறுவதில் சென்னை அமைச்சர்களுக்குள்ள நல்லெண்ணமாவது உறுதிபெற வாய்ப்பு கிடைக்கும். அவை விடுத்து, அதிகாரத்தில் இல்லாத மற்ற கட்சியினர் கைத்தறியாளர்களின் துயர் துடைக்க, 'கைத்தறியாடைகளையே அணியுங்கள்' என பிரசாரம் செய்வதுபோல், அதிகாரத்தில் உள்ள ஆற்றல் படைத்தவர்களும் பேசி வருவது விரும்பக்கூடியதாகாது. அத்தகைய பிரசாரத்தின் மூலம் தாங்கள் எதிர்பார்க்கும், கைத்தறியாளர்களின் அன்பும் ஆதரவும் அமைச்சர் குழுவினருக்குக் கிடைக்கவும் கிடைக்காது.

தனது கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றப்போகிறதா இல்லையா என இந்தியப் பேரரசை அதட்டிக் கேட்க, நமது அமைச்சர் குழுவிற்கு, அதற்காகத் தேவைப்படும் நெஞ்சுரம் வேண்டும். அத்துணிவு நமது அமைச்சர் குழுவிற்குத் துளியும் கிடையாது என்பதை, ஒருமுறை அல்ல—பலமுறை, தனது செயல் மூலம் அமைச்சர் குழு மெய்ப்பித்து வந்திருக்கிறது. எனவே, அமைச்சர் குழு, தனது கோழைத்தனத்தை, கைத்தறியாளர் விழாக்களில், நெஞ்சு நெக்குருகப் பேசுவதின் மூலம் காட்டிக்கொள்ள வேண்டி இருக்கிறது.

அதைக் கொண்டு, தங்கள் கண்களில் இருந்து பெருக்கெடுத்தோடிவரும் கண்ணீரை, கைத்தறியாளர்களும் அணை போட்டுத் தடுத்துக் கொள்ள வேண்டியதுதான்.

# கைத்தறியை பாதுகாக்க!

## சென்னை கூட்டுறவு சங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கை

மத்திய கிழக்கு, தூரக் கிழக்கு நாடுகளில் கைத்தறித் துணிகளுக்கான 'மார்க்கெட்டு'களை வளரச் செய்வதற்கான திட்டம் ஒன்றை மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

இத்தகவலை மந்திரி பக்தவத்சலம் சட்டசபையில் கூறியிருக்கிறார்.

இத்திட்டப்படி, சென்னை மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம், பாக்தாத், கொழும்பு, இரங்கூன், சிங்கப்பூர் ஆகிய தலை நகரங்களில் நான்கு கைத்தறித் துணி 'மார்க்கெட்டிங்' அதிகாரிகளை நியமித்துள்ளது என்றும், அவர்களிடம், தூரக் கிழக்கு, மத்திய கிழக்கு நாடுகளில் இந்திய கைத்தறி நெசவுத் துணிகளுக்கு 'மார்க்கெட்' தேடி வளர்த்துத்தர வேண்டிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருப்பதாயும் மந்திரியார் கூறியிருக்கிறார்.

தங்கள் நாட்டுத் தொழிலுக்கு ஆக்கம்தர வேண்டுமென்பதற்காக இந்தோனேஷிய சர்க்கார், இந்திய கைத்தறித் துணிகளுக்கு தடை விதித்திருப்பதால், அங்கு, இந்திய கைத்தறித் துணி விற்பனையைப் பிரபலப்படுத்த முடியவில்லை என்பதையும் மந்திரியார் கூறியிருக்கிறார்.

இந்த நாட்டிலிருந்து கைத்தறி ஏற்றுமதி செய்யப்படுவதை ஊக்குவிக்க வேண்டும் எனும் நோக்கத்துடன், இந்திய அரசாங்கம், கைத்தறி ஏற்றுமதிக்கான சுங்க வரியை ரத்து செய்திருக்கின்றனர் என்றும் மந்திரி குறிப்பிட்டிருக்கிறார்

# கைத்தறி 'சர்வே'

அகில இந்திய கைத்தறிக் குழுவின் வேண்டுகோளின்படி, சென்னை மாநிலத்திலுள்ள 5 சதவிகிதம் கைத்தறிகளின் 'மாதிரி சர்வே'யை சென்னை பல்கலைக் கழகம் மேற்கொள்ளும் என்றும், இத்திட்டத்திற்குச் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ள ரூ. 65,000-த்தையும் மத்திய சர்க்காரே ஏற்றுக்கொள்ளும் என்றும் தெரிய வருகிறது.

'மாதிரி சர்வே' வேலைகள், மாநிலம் முழுமையிலுமுள்ள 13-மாவட்டங்களில், மாவட்டத்திற்கு 8 'சென்டர்' வீதம் மொத்தம் 104 கைத்தறி 'சென்டர்'களில் நடைபெறும் என்று கூறப்படுகிறது.

# இந்தியாவில் அணுசக்தி!

## ஆஸ்திரேலிய விஞ்ஞானியின் நம்பிக்கை

"அணுசக்தி மூலம் மின்சார சக்தி தயாரிப்பதில் 'மிகவும் சக்தி வாய்ந்த ஒரு நாடாக' இன்னும் சிறிது காலத்திற்குள்ளாகவே இந்தியா மாறிவிடும்" என்று பிரபல ஆஸ்திரேலிய அணுசக்தி விஞ்ஞானி ஒருவர் கூறியிருக்கிறார்.

இந்தியாவில் 'தோரியம்' எனும் கனிப் பொருள் வேண்டிய அளவுக்குக் கிடைக்கிறது என்றும், இதன் மூலமாக அணுசக்தியை உற்பத்தி செய்வதில் இந்தியாவின் வருங்காலம் மிகச் சிறப்புவாய்ந்ததாகவே இருக்குமென்றும், இந்த அணுசக்தி தற்போதைய உபயோகத்திலிருந்துவரும் மின்சார சக்தியை மாற்றி அமைத்துவிடுமென்றும் கூறினார்

"எண்ணெய் உற்பத்தியில் சில நாடுகள் எப்படி புகழை அடைந்தனவோ, அதுபோலவே இந்தியாவும், அணுசக்தி மின்சாரம் தயாரிப்பதில் பிரபலமாகப் புகழ் பெற்றுவிடும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

# தொழிலாளர் 'பிராவிடண்ட்' நிதி

## 15 லட்சம் பேர் பயனடைந்துள்ளனராம்

புதுடில்லி, மார்ச் 20—

ஆறு பெரிய தொழில்களில் ஏற்படுத்தப்பட்ட சிப்பந்திகள் பிராவிடண்ட் பண்ட் திட்டத்தினால் இவ்வாண்டில் (1954–55) 1,900 தொழிற்சாலைகளில் 15 லட்சத்திற்கு மேற்பட்ட சிப்பந்திகள் அனுகூலம் பெற்றுள்ளதாக மத்திய தொழிலாளர் நல இலாகாவின் ஆண்டறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சென்ற ஆண்டு செப்டம்பர் திங்கள் இறுதிவரை இத்திட்டத்தின் மூலம் தொழிற்சாலைகளால் செலுத்தப்பட்ட பிராவிடண்ட் நிதித் தொகையின் மொத்தம் ரூ. 32 கோடி என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சாகுபடியில் 'புரட்சி'!

## 'செயற்கை மழை' சோதனையின் வெற்றி

குடகு மாநிலத்தில், வெற்றிகரமாக நடைபெற்ற செயற்கை மழை சோதனை ஒன்றை குடகு அமைச்சர்களும், சட்டசபை உறுப்பினர்களும் நேரில் கண்டனர்.

காப்பிச் செடிகள் பூக்கும் தருவாயிலிருக்கின்றபோது மழை பெய்யாவிட்டால், இனிமேல் இச்செயற்கை மழை முறையினால் மழை பெய்யவைத்து இலாபம் பெறலாம் என்று கூறப்படுகிறது.

இப்பரிசோதனையின் போது, அருகில் இருந்த ஒரு குளத்திலிருந்து இயந்திரம் ஒன்றின் மூலம் இணைப்புக் குழாய்கள் வழியாகத் தண்ணீர் இறைக்கப்பட்டது. இறைக்கப்பட்ட தண்ணீரை, புதிய முறையில் தயார் செய்யப்பட்டுள்ள தண்ணீர் இறைக்கும் கருவிகள், உயரே இருந்து மழை பெய்வது போல் பெய்யச் செய்தனவாம்.

இவ்வாறு செயற்கை மழை பெய்யச் செய்யும் இயந்திரங்களுக்கு ரூ 40,000 செலவாகுவதாகவும், ஒரு ஏகர் நிலத்தில் ஒரு அங்குல செயற்கை மழை பெய்விக்க இயந்திரங்களுக்காகும் செலவு ரூ 24 என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த 'பரீட்சார்த்த' முறை வெற்றி பெறுவதானால், காப்பி முதலியவற்றின் சாகுபடியில் நிச்சயம் ஒரு 'புரட்சி' ஏற்படும் என்றும் கருதப்படுகிறதாம்.

# தீவிர கதர் உற்பத்தி!

'தீவிர கதர் உற்பத்தி'யின் தேவையை அறிந்து, சென்னை சர்க்கார், திருப்பூரில், ஒரு சிறு அளவு சாயத் தொழிலுக்கும், அச்சடிப்பதற்குமென ஒரு நிலையத்தை அமைக்க அங்கீகாரம் அளித்துள்ளது.

இந்நிலையத்திற்கு மொத்தச் செலவு ரூ. 5000-மும், ஆண்டுச் செலவு ரூ. 45,580-ம் ஆகுமென மதிப்பிடப்பட்டுள்ளதாகவும், நடைமுதல் ஆண்டில் இதற்கு ரூ. 28,500 செலவிடப்படும் என்றும் கூறப்படுகிறது.

# இந்தியாவுக்கு ரஷ்ய டிராக்டர்கள்

புதுடில்லி, மார்ச் 20—

ரஷ்யாவிலிருந்து 20 டிராக்டர்கள் இறக்குமதி செய்ய இந்திய சர்க்கார் அனுமதி அளித்துள்ளதென்று தெரிகிறது.

இது தவிர, உ. பி.-யிலும், ம. பி.-யிலும் உள்ள தனிப்பட்ட இரண்டு நபருக்கு ரஷ்ய டிராக்டர்கள் வரவழைத்துக் கொள்ளவும் அனுமதி தரப்பட்டுள்ளதாம்.

இதுவரையிலும், அமெரிக்கா, பிரிட்டன் ஆகியவைகளிடமிருந்து தான் இந்தியாவுக்கு டிராக்டர்கள் இறக்குமதி செய்யப்பட்டு வந்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# கழகச் செய்திகள்

## நெல்லை மாவட்டத்தில் - நெடுஞ்செழியன் சுற்றுப் பயணம்

### குளத்தூர் :

12—3—55ல், கடைவீதி திடலில், தி. மு. கழகச் சார்பில், தோழர் கே. வி. கே சாமி தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் : எம். எஸ். சிவசாமி, சு. கந்தசாமி ஆகியோர் பேசிய பின், தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், திராவிடநாடு பிரியவேண்டிய அவசியம் பற்றியும், ஐந்தாண்டுத் திட்டத்தில் டில்லி ஆட்சி பீடம், ஒருதலைப் பட்சமாக வடக்குப் பகுதியிலேயே தொழில்களை அபிவிருத்தி செய்ததையும், தெற்கில் நல்ல வசதிகள் இருந்தும் புறக்கணிக்கப்பட்டிருப்பதையும் விளக்கியதுடன், சமூகத்தில் நிலவும் இழிதன்மையைப் போக்குவதற்கு தோழர்கள் பணிபுரிய வேண்டுமென்று கேட்டுக்கொண்டும் விரிவுரையாற்றினர். அவருக்கு, கழகத் தோழர்களால் கைத்தறி ஆடை அணிவிக்கப்பட்டது.

### நெல்லை :

13—3—55 மாலை 7 மணிக்கு நெல்லை ஆற்று மணலில், தி. மு கழகச் சார்பில், தோழர் கடவுள் தலைவர் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் சு. கந்தசாமி சிறிது நேரம் பேசிய பின், தோழர் நெடுஞ்செழியன், நாட்டின் தற்கால அரசியல் நிலை பற்றி விரிவுரையாற்றினர்.

நெல்லை மாநாட்டு பொருளாளர் தோழர் வி. எம் சூரியநாதன், மாநாட்டின் வரவு-செலவு கணக்குகளை விளக்கிவிட்டு தோழர் நெடுஞ்செழியனிடம் ரூ 578—3—0-க்கு 'செக்' ஒன்று வழங்கினர்.

### தென் திருபேரை :

14—3—55ல், மாவீடு பண்ணை மறுமலர்ச்சி மன்றத்தாரின் சார்பில், தோழர் சு. கந்தசாமி தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. பல சிற்றூர்களிலிருந்தும் சுமார் 5000 மக்கள் குழுமியிருந்தனர். சமுதாயத்தில் இருக்கிற இழிதன்மைகளையும், கல்வி அறிவு பெறவேண்டிய அவசியம் பற்றியும், மதம் மனிதனுக்கு இழைத்துள்ள இழிதன்மைகளை விளக்கியும், திராவிட நாடு பிரிவினையை வலியுறுத்தியும் தோழர் இரா. நெடுஞ்செழியன் நீண்டதோர் விரிவுரையாற்றினர்.

### திருச்செந்தூர் :

15—3—55-ல், தி மு கழகச் சார்பில், உயர்நிலைப் பள்ளியின் முன் தோழர் குலசேகரன் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் சு. கந்தசாமி பேசிய பின், தோழர் இரா. நெடுஞ்செழியன் தி.மு.க-வின் அரசியல், பொருளியல், சமுதாய இயல் கொள்கைகளை தெளிவாக விளக்கியும், திராவிட நாடு பிரியவேண்டிய அவசியம் பற்றியும், ஜாதியின் பேரால் மக்களை இழிவுபடுத்தும் தன்மையைப் போக்க இளைஞர்கள் பாடுபடுமாறு கேட்டுக்கொண்டும், பிற நாடுகள் தனித்தனியே இயங்கும்போது, திராவிடம் பிரிந்தால் ஏன் வாழமுடியாது என்று வினவியும், வளமாக வாழ்வதற்கு விளக்கம் தந்தும் விரிவுரையாற்றினர்

### சேரன்மாதேவி :

16—3—55ல் சேரன்மாதேவி தொடர்வண்டி நிலையத்தின் அருகில் உள்ள திடலில் தி. மு. கழகச் சார்பில், தோழர் பரமசிவன் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் சு. கந்தசாமி பேசியபின், தோழர் நெடுஞ்செழியன் அவர்கள், பெரியார் அவர்கள் காங்கிரசைவிட்டுப் பிரிவதற்கு சேரன்மாதேவி குருகுலம்தான் காரணமாயிருந்ததென்றும், காங்கிரசில் அன்றுமுதல் இன்று வரை நிலவும் ஜாதிக் கொடுமையை எதிர்த்து, சுயமரியாதை இயக்கமாக—திராவிட கழகமாக — திராவிட முன்னேற்றக் கழகமாக மக்களுக்குப் பணிபுரிவதற்கு சேரன்மாதேவிதான் காரணம் என்றும், அதே இடத்தில் பேசுவதற்கு தனக்கு வாய்ப்பு கிடைத்தமைக்காக மகிழ்வு தெரிவித்தும், திராவிட நாட்டுப் பிரிவினைக்காக அரசியல், பொருளியல், சமுதாயத் துறையில் தி. மு. கழகம் பணியாற்றி வருவதை விளக்கியும் மாற்றுக் கட்சியினரும் மகிழும் வண்ணம் விரிவுரையாற்றினர்.

### சாத்தான்குளம் :

17—3—55ல், சாத்தான்குளம் பெரியார் திடலில், தோழர் குலசேகரன் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் சு. கந்தசாமி பேசுகையில், தி. மு. கழகம் பொருளாதார விடுதலைக்குப் பாடுபடுவதை விளக்கிப் பேசினர். பின்னர், தோழர் நெடுஞ்செழியன் அவர்கள், திராவிட நாடு பிரிவினைக்கு ஆதாரமாக 97 நாடுகள் தனி அரசாயிருப்பதை எடுத்துக் காட்டியும், பெர்லின் நகரை இரண்டாகப் பிரித்து பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா ஆகிய நாடுகள் ஒரு பகுதியையும், ரஷ்யா மற்றொரு பகுதியையும் அரசு செலுத்துவதைப் பார்த்துக் கொண்டிருக்கிற கம்யூனிஸ்டுகள், திராவிடநாட்டு பிரிவினையைமறுப்பதில் அர்த்தம் இல்லை என்றும், திராவிட நாட்டு பிரிவினை கம்யூனிஸ்டு கொள்கைக்கு மாறுபட்டதல்லவென்றும் குறிப்பிட்டும் பேசினர்.

### கோவில்பட்டி :

18—3—55-ல், கோவில்பட்டி தி. மு. கழகச் சார்பில், தோழர் டபிள்யூ துரைசாமி அவர்கள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் நகரசபை உறுப்பினர் அருணாசலம், சு. கந்தசாமி ஆகியவர்கள் பேசியபின், தோழர் நெடுஞ்செழியன் அவர்கள், திராவிட நாடு பிரிவினையை விளக்கியும், டில்லி வடக்கில் மட்டுமே பல கோடி செலவில் பல திட்டங்கள், அணைக்கட்டுகள், தொழிற்சாலைகள், உரச்சாலைகள், மருத்துவ ஆராய்ச்சி நிலையங்கள், இவைகளை ஏற்படுத்துவதை விளக்கியும், விடுதலை பெற்ற நாட்டில் 100-க்கு 17 பேர்கள் மட்டுமே கல்வி கற்றவர்களாக இருப்பதை விளக்கியும், அரசாங்கத்தின் திறமையின்மையின் விளைவால், அரிசி வியாபாரத்தில் 45 கோடி ரூபாய் நட்டமும், இதுபோன்றே பல துறைகளில் நட்டம் ஏற்பட்டதை விளக்கியும், மத்திய அரசாங்கத்திற்கும்—மாநில அரசாங்கத்திற்கும் இருக்கிற சம்பள வித்தியாசத்தால் அரசாங்கக் கடைநிலை ஊழியர்கள் படும் அவதியை விளக்கியும் சொற்பொழிவாற்றினர்.

தோழர் நெடுஞ்செழியன் அவர்களுக்கு, பல தோழர்களால் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

## சென்னை 44-வது வட்ட தி. மு. கழகம்

13—3—55 இரவு 10 மணிக்கு கழகப் பணிமனையில், தோழர் எம், இராசு தலைமையில் நடைபெற்ற கழகச் செயற் குழுக் கூட்டத்தில் பேரூர் பொதுக் குழு முடிவுகளை வரவேற்றும், கழக வரவு-செலவு, பொங்கல் விழா வரவு-செலவு ஆகியவைகள் ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர், அனுதாபத் தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

## சேலம் மாவட்ட தி. மு. கழகக் கிளைகள் தேர்தல்

சேலம் மாவட்டச் செயலாளர் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் கீழ்க்கண்ட கிளைகளுக்கு, கீழ்க்கண்டவர்களை 27—3—55-ல் நடைபெறவிருக்கும் கிளைக் கழக செயற் குழு தேர்தல்களுக்கு ஆணையாளர்களாக நியமித்துள்ளார் :—

சேலம் நகரக் கிளை—பி. எம். குப்புசாமி (பிரதம ஆணையாளர்) ; இரா. தாண்டவன் (துணை ஆணையாளர்).

திருச்செங்கோடு—ர. வரதராசன்.

வேலூர்—ஆ. ஆனைமுத்து.

பொட்டனேரி—ப. கண்ணன்.

## செவ்வாய்பேட்டை 8-வது வட்ட தி.மு.க. ஆண்டுவிழா

13—3—55 காலை 10 மணிக்கு கழக ஆண்டுவிழா தோழர் எஸ் சமயப்பா தலைமையில் நடைபெற்றது. தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன் பேசியபின் தோழியர் சத்தியவாணிமுத்து, பெண்கள் முன்னேற்றம் பற்றி விரிவுரையாற்றினர். பின்னர், தோழர் க. அன்பழகன் சமுதாயத்தில் நாம் எவ்வளவு தூரம் முன்னேறவேண்டும் என்பதைப் பற்றியும், பார்ப்பனீயத்தின் கொடுமைகள் பற்றியும், குறள் நெறியுடன் வாழவேண்டிய அவசியம் பற்றியும் விளக்கவுரையாற்றினர். அன்று மாலை 7 மணியளவுக்கு அதே இடத்தில் தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. வடவர் ஆட்சியைப் பற்றி தலைவர் பேசியபின், தோழியர் சத்தியவாணிமுத்து மத்திய சர்க்காரின் ஊழல்கள், ஆவடி காங்கிரசில் நிறைவேற்றிய 'மாதிரி சோஷலிசம்,' ஆகியவை பற்றிப் பேசினர். பின்னர், தோழர் க. அன்பழகன் "தி. மு. கழகமும் அரசியலும்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினர்.

## சிங்கிபுரம் (சேலம்) தி. மு. கழக பொதுக் கூட்டம்

14—3—55 மாலை 6 மணிக்கு சந்தைப்பேட்டை மைதானத்தில் தோழர் எஸ் கே. பழனிமுத்து தலைமையில், ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எஸ். கந்தசாமி குழுவினர் இயக்கப் பாடல்கள் பாடினர். தோழியர் சத்தியவாணிமுத்து அம்மையார், சமூகம், அரசியல், பொருளாதாரம் குறித்தும், சிற்றுளி-சுப்பிரமணியம், மாற்றுக் கட்சிகளின் போக்கு பற்றியும், தோழர்கள் ஆனைமுத்து, சேரலாதன் ஆகியோர் தி. மு. கழகக் குறிக்கோள்—நோக்கங்கள் பற்றியும் பேசினர்.

## சங்கரநயினர்கோவில் தி. மு. கழகம்

தோழர் டி. ஆர். சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழு கூட்டத்தில், வரவு—செலவு கணக்குகள் சரி பார்த்து ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர், ஏப்ரல் இரண்டாவது வாரத்தில், கழகச் சார்பில் பொதுக் கூட்டம் ஒன்று நடத்துவதெனவும், 27—3—55ல் செயற்குழு தேர்தல் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## திருவெண்காடு தி. மு. க. பொதுக் கூட்டம்

### ஈ. வெ. கி. சம்பத் முழக்கம்

14—3—55 மாலை 6 மணிக்கு மேலவீதியில் தோழர் டி. வி. சம்பத் தலைமையில், தோழர் எஸ். கே ஆனந்தன் அழகிரி படிப்பகத்தைத் திறந்துவைத்துப் பேசியபின், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், காங்கிரசின் சோஷலிசத் திட்டத்தின் குறைபாடுகளை விளக்கியும், ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு பெற்ற அவல நிலைகளைக் குறித்தும் பேசினர். பின்னர், அவர், ஆண்டவனுக்கு விரோதிகள் யாரெனபதைப் பற்றியும், தமிழர்—ஆரியர்களுக்குள்ள குணவேறுபாடுகள் பற்றியும் விளக்கினர்.

## ஏழைகள் பெயரால் - பகற்கொள்ளையா?

### கடைத் தேங்காய் வழிப் பிள்ளையாருக்கா ?

புதுவையிலுள்ள ஏழை மக்களுக்குத் துணி விநியோகம் செய்யப் போவதாகக் கூறி, 'க்ஷேமகல போர்டார்,' திருமதி கேவல் சிங் தலைமையில், போலீசார் புடைசூழ, 17—3—55 காலை முதல் கடைத் தெருக்களில், பொருள்கள், பணம் வசூல் செய்தனர்.

கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைப்பது போல, அவர்கள் பணி இருந்தாலும், ஒவ்வொரு கடைகளிலும் அவர்கள் வசூல் செய்த முறை, கடைக்காரர்களுக்கும், அங்கு சூழ்ந்துநின்று வேடிக்கைபார்த்துக் கொண்டிருந்த பொது மக்களுக்கும் சிறிதும் பிடிக்கவில்லை; எல்லோரும், 'இதென்ன பகற் கொள்ளை,' 'இதென்ன அக்ரமம்?' —'இதுதான் சுயராஜ்ய ஆட்சியா?' — என்று வெறுத்துப் பேசிக்கொண்டிருந்தன்ர்

ஒவ்வொரு கடையிலும் பணமும், பண்டங்களும் கொடுத்தனர். அப்படியிருந்தும், வசூலித்தவர்கள், மேற்கொண்டும் தம் கைகளில் கிடைத்த பொருட்களையும் வலுவில் எடுத்துக்கொண்டனர். எல்லோரும் பெண்களாயிருந்தபடியால், தடுக்க முடியாது திகைப்புற்றனர் வியாபாரிகள் !

ஒவ்வொரு சிறிய கடையிலும் கூட ரூ. 5-க்குக் குறையாத மதிப்புடைய சாமான்களைப் பெற்றுச் சென்றனர். இதில் இன்னொரு விசேடம் என்னவென்றால், ஒவ்வொரு கடையிலும் வாங்கிய பணம் எவ்வளவு? — எடுத்துச் சென்ற பொருட்களின் மதிப்பு எவ்வளவு?—என்பவற்றைக் குறித்துக்கொள்ளவில்லை; வாங்கப்பட்ட பொருட்களையெல்லாம் இரண்டு வண்டிகளில் நிரப்பிக் கொண்டிருந்தனர்: இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த பொது மக்களும், கடைக்காரர்களும், 'இப்படி கணக்கு வழக்கின்றிப் பகற்கொள்ளையடிப்பது போன்று சேகரிக்கப்படும் இப்பொருள்கள் எப்படிச் செலவழியப் போகின்றனவோ?' என்று வெறுப்புடன் பேசிக்கொண்டார்கள்.

இவ்வளவுக்கும், ஒரே ஒரு கடைக்காரர்தான் இவர்கள் வசூலிக்கும் முறையைக் கண்டித்துக் கொடுக்க மறுத்ததாகவும், வசூலிக்க வந்தவர்கள் அவர் முகவரியைக் குறித்துச் சென்றதாகவும் கூறப்படுகிறது. (ச. சி)

## பம்பாய் — கொலாபா தி. மு. கழகம்

11—3—55ல், தோழர் எஸ். கே. ராசு தலைமையில் நடைபெற்ற கழக மாதாந்திரக் கூட்டத்தில், கழக வரவு-செலவு கணக்குகள் பரிசீலிக்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டதுடன் மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

## மலையாண்டிப்பட்டணம் தி. மு. கழகம்

12—3—55ல், தோழர் த. காகமுத்து தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில் புத்தாண்டுத் தேர்வு நடைபெற்றது. செயலாளர் : ம. பா. ஆறுமுகம்; துணைச்செயலாளர்: ம. ரா. மயில்சாமி; பொருளாளர்: ம. ரா. காச்சியப்பன்; மாவட்டப் பிரதிநிதிகள்: ம. பொ. மயில்சாமி, ம. பா. ஆறுமுகம். மற்றும் அனுதாபத் தீர்மானங்கள் பலவும், வேறு இரண்டொரு தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

## சுவானவெட்டியில் தி. மு. கழகத் திறப்புவிழா

17—3—55 மாலை 7 மணிக்கு, தோழர் ஏ. கோவிந்தசாமி தலைமையில் ஊர்வலமும், தோழர் ப. உ. சண்முகம் அவர்களால் கொடியேற்றுவிழாவும் நடைபெற்ற பின்னர், இரவு 8 மணிக்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் ப. உ. சண்முகம், கலீல், இராமலிங்கம், டி. கன்னையா ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பின்னர், கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— செயலாளர்: நா. இரத்தினம்; துணைச் செயலாளர்: கே. கணேசன்; பொருளாளர்: ர. கோவிந்தசாமி; செயற்குழு உறுப்பினர்கள்: பூ இரத்தினம், ர. மொட்டையன், ர. ராஜகோபால், இ. கோவிந்தசாமி.

## செல்லப்பம்பட்டி தி. மு. கழக ஆண்டுவிழா

12—3—55ல், தோழர் சி. காத்தமுத்து தலைமையில், கழக ஆண்டுவிழா நடைபெற்றது. தோழர்கள் முத்துகிருஷ்ணன், அங்கமுத்து, சேப்பு ஆகியோர் பேசியபின், தோழியர் சத்தியவாணிமுத்து கழகக் கொள்கைகளை விளக்கி விரிவுரையாற்றினர்.

## ஆப்பிரிக்காவில் இந்தியர் பலி!

### ஐந்தாவது முறையாகத் தாக்குதல்

நைரோபியில் உள்ள இந்தியர் பகுதியில், இருபத்திரண்டு வயதுடைய ரமண்பாய் பிக்காபாய் என்ற இந்திய இளைஞர், சில ஆப்பிரிக்கர்களால் குத்திக் கொலை செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

இதுபற்றி சந்தேகத்தின் பேரில் ஒரு ஆப்பிரிக்கர் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்றும், கொலைச் சம்பவம் நடந்த இடத்திற்கருகில், ஒரு கத்தி கண்டெடுக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

மாலை 7 மணி சுமாருக்கு 5 ஆப்பிரிக்கர்கள் இந்த இளைஞனைத் தாக்கி குத்திக் கொலை செய்திருக்கிறார்கள். அவரைக் குத்திய போது, அவர் எழுப்பிய கூக்குரலைக் கேட்டு அருகில் உள்ள ஒருவர் ஓடிவந்திருக்கிறார். இரத்தம் தோய, வீதியில் ரமண்பாய் கிடந்ததைக் கண்டு போலீசாருக்குத் தகவல் தெரிவித்திருக்கிறார். பின்னர், ரமண்பாய் மருத்துவ மனையில் மரணமுற்றாராம்.

கடந்த சில வாரங்களில், இந்தியர்கள்மீது ஆப்பிரிக்கர்கள் நடத்தும் 5-வது தாக்குதல் இது என்றும், இம்மாதிரி கொலைகள்செய்து அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக சில 'மாவ் மாவ்' இயக்கவாதிகள் நகரத்தில் சுற்றிக்கொண்டிருப்பதாயும் போலீசார் தெரிவிக்கின்றனர்.

## தென் கோரியத் தலைவரின் விபரீதப்போக்கு!

ஒரு செய்தியைப் பிழைபடப் பிரசுரித்ததற்காக, ஒரு லட்சம் பிரதிகளுக்கும் மேலாக விற்பனையாகும் மிகப் பழைமையும், செல்வாக்கும் பெற்ற எதிர்க்கட்சிப் பத்திரிகை ஒன்றுக்கு தென் கோரிய ஜனாதிபதி சிங்-மென்-ரீ 'மூடுவிழா' நடத்தியிருக்கிறார்.

ரீயின் அரசாங்கத்தை,'பொம்மை நிர்வாகம்' என்று அப்பத்திரிகையில் பிழைபடப் பிரசுரிக்கப்பட்டிருந்ததே இந்த 'மூடு விழா'வுக்குக் காரணமாம்.

அப்பத்திரிகையில் வெளியான செய்தி ஒன்றுக்கு இந்தத் தலைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது ; அருகருகே இருந்த இரண்டு செய்தித் தலைப்புகள் ஒன்றோடொன்று கலந்துவிட்டதால்தான் இந்தத் தவறு ஏற்பட்டிருக்கிறது.

இந்தப் பத்திரிகை தென் கோரியாவிலே உள்ள மிகப் பெரிய 3 தினசரிகளில் ஒன்றாகும்,

# ஈ.வெ.கி.சம்பத் எச்சரிக்கை

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

தொடர்ந்து அவர் பேசியதாவது :—

"பேரூர் பொதுக்குழு தீர்மானத்திற்கிணங்க 1955-ம் ஆண்டு மார்ச் 20-ந் தேதி மிக முக்கியமான நாளாகும். இன்றையதினம் சென்னை மாநிலம் முழுவமுதுமுள்ள மக்கள் ஆர்வத்துடனும், எழுச்சியுடனும் கூடி 'ஐந்தாண்டுத் திட்ட கண்டன நாளில்' கலந்து கொண்டிருப்பார்கள் ; இங்கே நான் பேசிக்கொண்டிருக்கின்றேன்—கோவையில் தோழர் இரா. நெடுஞ்செழியன் சிதம்பரம் பூங்காவில் திரண்டுள்ள மக்களிடம் ஐந்தாண்டுத் திட்டத்தின் அநீதி குறித்து பேசிக்கொண்டிருப்பார்—திருச்சி நகரில் டவுன் ஹால் முன்னிலையில் தோழர் என். வி. நடராசன் பேசிக்கொண்டிருப்பார்—இப்படி இந்த மாநிலம் முழுவதும் நமது கிளைக் கழகங்கள் உள்ள பெருவாரியான ஊர்களில் நமது தோழர்கள் ஐந்தாண்டுத் திட்டத்தின் நிலை குறித்து பேசிக்கொண்டிருப்பார்கள்.

"சேலத்தில் கிடைக்கும் இரும்புதான் இந்தியாவிலேயே சிறந்தது', என்று டாட்டா கம்பெனியில் எழுதிவைத்திருக்கின்றார்கள் ; வடநாட்டுக்காரன் ஒத்துக்கொள்கின்றான்—' சேலத்து இரும்பு சிறந்தது,' என்று !

"டெல்லியிலுள்ள அமைச்சர் ஒருவரை பத்திரிகை நிருபர்கள், சேலத்தில் இரும்பு தொழிற்சாலை ஏற்படுத்துவது குறித்து கேட்டபோது, 'சேலத்திலா இரும்புத் தொழிற்சாலை ; சேலத்திலே நிச்சயமாக இல்லை,' என்றார்.

"'சேலத்தில் இரும்பு தொழிற்சாலை காண அனுமதிக்காத வடநாட்டு ஏகாதிபத்தியமே, நீ ஒழிந்து போ,' என்று நாம் சொல்கின்றோம்.

"'ஐந்தாண்டுத் திட்டம்' என்ற பெயரால் தென்னாடு சுரண்டப்படுகின்றது ; ஐந்தாண்டுத் திட்டத்திற்குக் கடனாக பணம் கொடுங்கள் ; நவ இந்தியாவை நிர்மாணிப்போம்,' என்று சினிமா கொட்டகையில் விளம்பரம் செய்கின்றார்கள் ; தென்னாட்டு மக்கள் பணம் போடுகின்ற பங்குதாரர்கள் ; ஆனால், பலன் அனுபவிப்பவர்கள்—சுகம் அனுபவிக்கின்றவர்கள் வடநாட்டவர்கள் !

"ஐந்தாண்டுத் திட்டம் தென்னாட்டை புறக்கணித்துள்ளது என்று நாம் மட்டும் சொல்லவில்லை ; பெரியநாயகன் பாளையத்தில் கூடிய ஐந்தாண்டுத் திட்ட அரங்கக் கூட்டத்தில் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் கூறினார்—'பெரிய பெரிய தொழிற்சாலைகள் நீர்த்தேக்க திட்டங்கள், மின்சார உற்பத்தி நிலையங்கள் அனைத்தும் வடக்கேதான் நிர்மாணிக்கப்படுகிறது ; இப்படியே நிலைமை நீடித்தால் இந்தியாவின் எதிர்கால அரசியலில் ஆபத்தான கொந்தளிப்பு ஏற்படும்',—என்று எச்சரித்துள்ளார்.

"ஆவடி காங்கிரஸ் மாநாட்டின் வரவேற்பு கமிட்டி தலைவர் திருமதி அம்புஜம்மாள் தனது வரவேற்பு உரையில் கூறினார்கள்—'முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில், எல்லா பெரிய திட்டங்களும் வடநாட்டில் உருவாகிவிட்டதாக இங்கு அபிப்பிராயம் நிலவுகின்றது ; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது தென்னாடு கவனிக்கப்பட வேண்டும்'—என்று நிலையை விளக்கியுள்ளார்கள்.

"இவைகளுக்கு இதுவரையில் எந்த வடநாட்டுத் தலைவர்கள் பதில் கூறினார்கள் ? நேரு பதில் கூறியிருக்க வேண்டாமா ? அவர்கள் சொல்வது தப்பு என்றால், காங்கிரஸ் தலைவர்கள் கண்டித்திருக்க வேண்டும். இது வரையில் செய்தார்களா ? இல்லை. ஏன் ? அவர்கள் சொல்வதில் உண்மை இருப்பதால்தான் !

"'தென்னாட்டில்விவசாயம் பெருகும் — அதற்குத் திட்டமுள்ளது'—என்கிறார்கள் ; விவசாயம் பெருகி விளைச்சல் ஏற்பட்டால் மட்டும் போதாது ; இவ்வாண்டில் நல்ல விளைச்சல் ; ஆனால், விலை சரிவு ; எனவே நல்ல விளைச்சல் நமது நாட்டின் பொருளாதார பற்றாக்குறையை நீக்கவில்லை.

"கொள்ளை கொடுப்பதற்கும் அளவுண்டு;கொள்ளையடிப்பதற்கும் அளவுண்டு ; நிலைமை இப்படியே நீடித்தால், இன்னும் 10 ஆண்டுகளில் தென்னாட்டை சுரண்டுகின்ற அளவு சுரண்டிக்கொண்டு 'இனி தென்னாட்டையும் சேர்த்து ஆட்சி செய்வதால் இலாபம் இல்லை,' என்று தெரிந்ததும், நம்மை 'தனியே இருந்து ஆட்சி செய்யுங்கள்,' என்று சொல்லப்போகிறார்கள் ; ஏகாதிபத்திய வெறிகொண்ட நாடுகள், இந்த முறையைத்தான் பின்பற்றுகின்றன.

"பொருளாதாரத் துறையில், ஐந்தாண்டுத் திட்டம் மிக நியாயமான திட்டம் என்பதால் வெற்றி அடைகின்றதா என்றால், இல்லை ; இராணுவ பலத்தால் திட்டத்தைத் திணிக்கிறார்கள்.

"நமக்குக் கிடைத்திருப்பது சுயராஜ்யமா ? இங்கே ஜனநாயகம் அமுல் நடத்தப்படுகின்றதா ? இல்லை ; இங்கேதான் பட்டினிச் சாவு, கைத்தறியாளர் துயரம், விவசாயிகள் இன்னல்!

"ஜனநாயகத்தை அமுல் நடத்துவோம் என்று சொன்னவர்கள், எதற்காக ஆண்டொன்றுக்கு 10 இலட்சம் ரூபாய் செலவில் கவர்னரை நியமிக்கின்றார்கள் ? திரு. பிரகாசா யார் ? அவர் ஏராளமான அதிகாரங்களை படைத்த தனி மனிதர் ; அவர் குரலுக்கு இராணுவம் ஓடிவரும் ; இடும் கட்டளையை நிறைவேற்றும்.

"வெள்ளைக்காரன் காலத்தில் காங்கிரசார் கூறினார்கள் — 'எர்ஸ்கின், ஆர்தர் ஹோப், வெலிங்டன் ஆகிய கவர்னர்கள், ஏகாதிபத்தியத்தின் சின்னங்கள்,' என்று—அப்படியானால் திரு. பிரகாசாவும் அப்படித்தானே ; சென்னை மாநிலத்தின் அதிகாரம் பிரகாசாவின் கையில்தானே ! இதை ஜனநாயகம் என்று குருடனும் ஒப்புக்கொள்ள மாட்டான்.

"இது வெறும் மானத்தைப் பற்றிய பிரச்சினை மட்டுமல்ல ; கம்யூனிஸ்டு தோழர்கள் அடிக்கடி ஆசையோடு பேசும் சோற்றுப் பிரச்சினையும் இதில்தான் அடங்கியுள்ளது ; எனவே, இராணுவ பலத்தை வைத்துக்கொண்டு வடநாடு, தென்னாட்டை ஆட்சி செய்கின்றது ! காங்கிரஸ் சர்க்காரின்—டெல்லி சர்க்காரின் சாகசம், இனியும் தென்னாட்டு மக்களை ஏமாற்ற முடியாது.

"அகில இந்தியக் காங்கிரஸ் மாநாட்டை ஆவடியிலே கூட்டிக் காட்டினாலும், 30 இலட்சம் செலவு செய்து காட்சிஜோடனைகளைக் காட்டினாலும், 'சோஷலிசம் மாதிரி' என்று தீர்மானம் போட்டாலும், தென்னாட்டு மக்கள் ஏமாறமாட்டார்கள்.

"எனவே, சென்னை சட்டசபையிலே டெல்லி சர்க்காரின் ஐந்தாண்டுத் திட்டத்தைக் கண்டித்து, தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் ; இதைச் செய்யுமா, காமராசர் சர்க்கார் ? டெல்லி சர்க்காரின் ஓரவஞ்சனையை எதிர்த்து, அது போராடுமா ?"

## பெண்ணாசையை மறக்க !

பனி மலையில் ஒரு ஆண் சுமார் 1,700 அடி ஏறியபின், அவருக்குப் பெண்ணாசையே அடியோடு அற்றுப் போகிறதென்றும், அதனால்தான் இந்துமத யோகிகள் 'தியானம்' செய்ய இமயத்தை நாடுகின்றனரென்றும், பிரெஞ்சு மலையேறிக் குழுவினர் கூறியிருக்கின்றனர்.

# சென்னையில்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

களை செய்து வருவதோடு, தென்னாட்டின் நலன்களை புறக்கணிப்பதின் மூலம் மாற்றாந் தாய் கொள்கையை கடைப்பிடிப்பதை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது. மேற்படி நிலையைப் பற்றி சென்னை சர்க்கார் மத்திய சர்க்காரை தட்டிக் கேட்காமல் அதனுடன் ஒத்துழைப்பதை இக்கூட்டம் கண்டிக்கிறது," என்று தீர்மானம் படிக்கப்பட்டு, பொதுமக்களின் பெருத்த கைதட்டுதலின் மூலம் ஆதரவு பெறப்பட்டு, ஒருமனதாக நிறைவேறியது.

### 4-வது வட்டம்

20—3—55-ல், வண்ணை, மணி கண்டமுதலி தெரு, 6-வது சந்து இளைஞர் முன்னேற்ற மன்றத்தில், தோழர் கி. ம. நடேசன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது தோழர்கள் மு பெருமாள், பரசுராமன், நடராசன், காளியப்பன், தர்மலிங்கம் ஆகியோர் ஐந்தாண்டுத் திட்டக் குறைகளையும், திராவிட நாடு பெறவேண்டியதின் அவசியத்தையும் பற்றிப் பேசினர்.

### 7-வது வட்டம்

20—3—55 காலை 10 மணிக்கு தோழர் சி. ஆர். பாலசுந்தரம் தலைமையில் கண்டன ஊர்வலம் நடைபெற்றது.

### 12-வது வட்டம்

20—3—55 காலையில், மஜீத் மன்றத்தில் தோழர் என். பி கோபால் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தோழர்கள் பார்த்தசாரதி, டி. டி. இராசு, அப்துல் சலாம், ஆறுமுகம் ஆகியோர் ஐந்தாண்டுத் திட்டத்தைக் கண்டித்துப் பேசினர்.

### 18-வது வட்டம்

20—3—55 காலை 9 மணியளவில், தோழர் இரா. அகமழகன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் தமிழ்ப்பித்தன், முத்துராமன், அருணன், செல்லப்பாண்டியன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். ஐந்தாண்டுத் திட்டத்தைக் கண்டித்துத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

### 19-வது வட்டம்

20—3—55ல் தோழர் ஏ. கே. சாமி இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தில், ஐந்தாண்டுத் திட்ட கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### 23-வது வட்டம்

20—3—55 காலை 10 மணிக்கு, கழகப் பணிமனையில் நடைபெற்ற செயற் குழுக் கூட்டத்தில் தோழர்கள் பலர், ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருப்பதை தக்க ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டி, அதனைக் கண்டித்துச் சொற்பொழிவாற்றினர்.

* * *

20—3—55 மாலை 6 மணியளவில், அழகிரி நினைவு மன்றத்தில், தோழர் ஜே. எஸ். தாஸ் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் பலர் ஐந்தாண்டுத் திட்டத்தைக் கண்டித்துச் சொற்பொழிவாற்றினர்.

### 29, 30-வது வட்டம்

சென்னை 29, 30 ஆகிய இரண்டு வட்டக் கிளைக்கழகங்கள் சார்பில் சுவரொட்டிகள் மூலமாகவும், துண்டறிக்கைகள் மூலமாகவும், ஐந்தாண்டுத் திட்ட கண்டனம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

### 39-வது வட்டம்

20—3—55 காலை 10 மணிக்கு, கழகக் கட்டிடத்தில் தோழர் ம. செ த. மூர்த்தி தலைமையில் நடைபெற்றது. அதுபோது ஐந்தாண்டுத் திட்டத்தால், அவதியுறும் மக்களுக்கு நன்மை கிடையாதென்று பல தோழர்கள் தக்க ஆதாரங்களோடு எடுத்துக்காட்டியபின், கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# தூத்துக்குடி நகர தி. மு. கழக கிளைத் தேர்தல்

தூத்துக்குடி நகரத் தி. மு. க. கிளைத் தேர்தல் 27—3—55 ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணி அளவில் தூத்துக்குடி வடக்கூர் பார் கிளப்பில் நடைபெறும். சென்னைத் தோழர் கே. எம். கண்ணபிரான் தேர்தல் ஆணையாளராக இருந்து தேர்தலை நடத்திவைப்பார். தூத்துக்குடி நகர எல்லைக்குள் 28—2—55-ம் நாளுக்கு முன் உறுப்பினரான தி. மு. கழகத் தோழர்கள் அனைவரும் கூடி தேர்தலைச் சிறப்பாக நடத்து வார்களாக.

சி. என். அண்ணாதுரை,
பொதுச் செயலாளர்

'அறிவகம்', சென்னை.
20—3—55

*****************

# கோவை நகர தி. மு. கழக உறுப்பினர்கட்கு

கோவை நகர தி. மு. கழகத் தேர்தல், 27—3—55 மாலை 4 மணிக்கு, தி. மு. கழக அலுவலகத்தில் நடைபெறும்.

மேற்படி தேர்தலில் போட்டியிடும் தோழர்கள், 25—3—55 இரவு 9 மணிக்குள் நகர செயலாளரிடம் பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும் ; மனுக்களை திருப்பிப் பெற கடைசி நாள் (27—3—55) நடுப்பகல் 12 மணி வரை அனுமதிக்கப்படும்.

உறுப்பினர் பட்டியல், தினசரி மாலை 6 முதல் இரவு 9 மணி வரை கழக அலுவலகத்தில் பார்வைக்கு உள்ளது. அதில் மாற்றங்கள், திருத்தங்கள், சேர்க்க வேண்டியவைகள் இருந்தால் எழுத்து மூலமாக 25—3—55-க்குள் செயலாளரிடம் சேர்ப்பித்தால் கவனிக்கப்படும்.

தேர்தல் தினத்தன்று உறுப்பினர் பட்டியலில் இல்லாத நபர்கள் கண்டிப்பாக தேர்தலில் அனுமதிக்கப்படமாட்டார்கள்; உடன ரசீது கொண்டுவந்தால் அனுமதிக்கப்படும்.

# சேலம் நகர தி.மு. கழக உறுப்பினர்கட்கு

"23-3-55 இரவு 9½ மணிக்கு சேலம் நகர தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம், 13-வது வட்டம் கல்லாங்குத்து கிளையில் நடைபெறும். அதுசமயம் கழக வரவு-செலவு கணக்கு, புதிய நகரக் கிளை தேர்தல், மற்றும் பல முக்கிய பிரச்சனைகள் குறித்து யோசிக்க இருப்பதாலும், இதுவே கடைசி கூட்டமாதலாலும் எல்லா உறுப்பினர்களும் தவறாமல் வரக் கோருகிறேன்," என, செயலாளர் ஈ. ஆர். கிருஷ்ணன் கேட்டுக்கொள்கிறார்.

# சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

மார்ச் 24: குடந்தை
26: சோதைமங்கலம்
27: ஆவணியாபுரம்
28: கோவிலூர்
30: திருநள்ளாறு

## ஐந்தாண்டுத் திட்டம்

துரித முயற்சிகள் !

ஐந்தாண்டுத் திட்ட வேலைகள் யாவும் துரிதமாக நடைபெறுவதற்காக இந்திய சர்க்கார் இலாகாக்களுக்கெல்லாம் விரிவான அதிகாரங்கள் வழங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இதன் பலனாக ஒவ்வொரு இலாகாவிலும் அவசரச் செலவுகள், தற்காலிக நியமனங்கள் முதலியவை நடைபெறலாம் என்று சொல்லப்படுகிறது.

# ஐந்தாண்டுத் திட்ட கண்டனக் கூட்டம்

கொளத்தூர்

திரு. போஜன் ரைஸ் மில்லுக்கு அருகாமையில்

24—3—55 இரவு 7 மணிக்கு

தலைவர்: ஜி. சதாசிவம்

பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
சிற்றுளி சுப்பிரமணியம்

## சென்னை 35-வது வட்ட தி. மு. கழக செயற்குழு உறுப்பினர்கட்கு

23—3—55 மாலை 6 மணிக்கு, சென்னை 35-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம், கழகக் கட்டிடத்தில் நடைபெறும். அதுபோது, ஐந்தாண்டுத் திட்ட கண்டனப் பொதுக்கூட்ட வரவு-செலவுகள் பரிசிலனை செய்யப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

# திருச்சி மாவட்ட தி.மு. கழக செயற்குழு உறுப்பினர்கட்கு

"25—3—55 காலை 10 மணிக்கு, திருச்சி, சிந்தாமணி தி. மு. கழக அலுவலகத்தில், திருச்சி மாவட்ட தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது மாவட்ட மாநாட்டின் வரவு-செலவு கணக்குகளையும், கழக நடவடிக்கைகளையும் பற்றிப் பேசி முடிவு செய்யப்படும். எல்லா உறுப்பினர்களும் தவறாது வர வேண்டுகிறேன்," என, திருச்சி மாவட்ட தி. மு. கழக செயலாளர் தோழர் அ. பெ. தர்மலிங்கம் கேட்டுக் கொள்கிறார்.

# கோவை மாவட்ட தி.மு. கழக செயற்குழு உறுப்பினர்கட்கு

"26—3—55 மாலை 5 மணி அளவில், ஈரோடு, நேத்தாஜி வீதி, 342-ம் எண்ணுள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் (கடை வீதியிலுள்ள பாம்பே ஹவுஸ் ஜவுளிக் கடைக்கு மேல் மாடியில்) கோவை மாவட்ட தி. மு. கழக செயற் குழுக் கூட்டம் நடைபெறும். அதுசமயம் பேரூர் பொதுக் குழு முடிவுகள், மாநில மாநாட்டு நிதி இவைகள் குறித்து ஆலோசிக்கப்படும். மாவட்ட செயற் குழு உறுப்பினர்கள் அனைவரும் வருகைதர வேண்டுகின்றேன்," என, கோவை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஈ. வெ. கி. சம்பத் கேட்டுக்கொள்கிறார்.

குறிப்பு : புதிய சேர்தலுக்கு முன்னர் நடைபெறும் கடைசி செயற் குழுக் கூட்டமாகையால் புகைப்படம் எடுக்க ஏற்பாடாகியுள்ளது.

## திருக்குறள் வகுப்பு

23—3—55 மாலை 6 மணிக்கு, சென்னை, புரசை, எண் 100, வெள்ளாழத் தெரு, தொண்டை மண்டல வேளாளர் சங்கத்தில், தோழர் க. அன்பழகன் திருக்குறள் வகுப்பு நடத்துவார்.

## இலக்கியம்

23—3—55 மாலை 3 மணிக்கு, மாயூரம் அடுத்த ஆயங்குடிப்பள்ளம் வெங்கடேசா உயர்நிலைப் பள்ளி நடுமன்றில், தோழர் அறிவுடை நம்பி 'இலக்கியம்' எனும் தலைப்பில் பேசுவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி என். அண்ணாதுரை, எம்.ஏ.